புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சங்கப் புறப் பாடல்களில் புலவர்களின் வாழ்த்தியல் திறம்

முனைவர் த. ராமலெட்சுமி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி, மேலப்பாளையம்

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் அகம், புறம் என்னும் இரு பிரிவுகளின் கீழ் அமைந்தவை. சங்கப் பாடலாசிரியர்கள் தம் செய்யுளுக்குப் பாடு பொருளாக அக்கால மக்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு பாடலமைத்தனர். அதனை அகத்திணை, புறத்திணை என வகுத்தனர். அகம் என்பது காதல் ஒழுக்கத்தையும், புறம் என்பது போர் முதலான பிற ஒழுக்கங்களையும் குறித்து அமைந்தவை. இவற்றுள் புற இலக்கியங்களில் புலவர்கள் அரசரை வாழ்த்தியும், புகழ்ந்தும் பாடல்கள் பாடியுள்ளனர். அவ்வாறு வாழ்த்திப் பாடப்பட்ட பாடல்களில் அமைந்துள்ள புலவர்களின் வாழ்த்தியல் திறனைக் காண்பது இவ்வாய்வாகும். முன்னுரை, புலவர்கள், புலவர் – விளக்கம், புலவர் வாழ்வாதாரம், வாழ்த்து, குடும்பம், நீண்ட ஆயுள், ஈகையாளனாக வாழ்த்துதல், இறப்பும் நோயும் நீங்கிட வாழ்த்துதல், முடிவுரை போன்ற தலைப்புகளில் இவ்வாய்வு அமைகின்றது.

திறவுச் சொற்கள் : சங்கம், இலக்கியங்கள், வாழ்த்து, புறம், புலவர்கள்

## முன்னுரை

நிகழ்காலத்தை எதிர்காலத்திற்கு அடையாளம் காட்டுவதிலும் படம் பிடித்து காட்டுவதிலும் பெரும் பங்கு வகிப்பவை ஊடகங்களே ஆகும். அவற்றோடு முக்கிய பங்கு வகிப்பவை இலக்கியங்கள் ஆகும். அவை சமுதாய நிகழ்வுகளைத் தங்கள் எழுத்துகள் வழி இயல்பாகவே மக்களுக்கு உணர்த்தி விடுகின்றன. எனவே இலக்கியவாதிகள் சமுதாய நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டும் உன்னதப் படைப்பாளிகளாக வலம் வருகின்றனர். அத்தகைய வரிசையில் சங்க காலத்தை நம் கண் முன் கொண்டு வருபவர்கள் சங்கச் சான்றோர்களான புலவர்களே ஆவர். அத்தகைய புலவர்கள் அரசரை வாழ்த்திப் பாடுவதில் வல்லவர்களாகவே விளங்கினர். அவர்களின் வாழ்த்துப் பாடல்களில் இடம்பெறும் செய்திகள் தெரிவிக்கும் உண்மைகளை விளக்கும் பொருட்டாக இக்கட்டுரை இடம்பெறுகிறது.

## புலவர்கள்

சங்க இலக்கியங்களைத் தொகை நூல்கள் என்று கூறுவர். அதற்குக் காரணம் அவற்றில் அமைந்த பாடல்கள் அனைத்தும் பல்வேறு காலங்களில், பல்வேறு இடங்களில், பல்வேறு இனத்தையும், தொழிலினையும் சார்ந்த புலவர் பெருமக்களால் படைக்கப்பட்டதே ஆகும். அவர்களில் சாதாரண குடிமக்கள் முதல் அரசர் குடியைச் சார்ந்தோர் வரை இருந்தனர். இவர்களில் ஆண்பாற் புலவர்களும் இருந்தனர். பெண்பாற் புலவர்களும் இருந்தனர். இவர்கள் தங்கள் படைப்புகளைப் பதிவுகளாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பாடல்களைப் படைக்கவில்லை. மாறாக தங்கள் கண் முன் தெரிந்த உண்மைகளைத் தாங்கள் அறிந்ததை அறிந்த வண்ணமே அறிவின் வழிநின்று பாடல்களாக படைத்தனர்.

*புலவர் - விளக்கம்*

*புலவர் என்பவரைப் பற்றி பல்வேறு அறிஞர்களும் பல்வேறு கருத்துக்களைத் தருகின்றனர். 'யுசவளைவ' என்று கலைஞர் என்னும் சொல்லுக்கு விளக்கம் தருகிறது தமிழ் ஆங்கில அகராதி.*[1] *புலவர், வித்துவான், பண்டிதர் என்று மதுரை தமிழ்ப் பேரகராதி விளக்கம் தருகிறது.*[2] *இவைகளைக் காணும் போது புலவர் என்போர் பண்டிதத்தன்மையுடைய படைப்பாளர்கள் என்று பொருள் கொள்ளுதல் தகும்.*

*புலவரின் வாழ்வாதாரம்*

*சங்கச் சமுதாயத்தில் புலவர் என்றொரு தனிப் பிரிவினர் காணப்படவில்லை. அனைத்துத் தொழில் புரிந்தோரிலும் கவி பாடும் திறனுடைய தனித்தன்மையின் காரணமாக சிலர் சமுதாயத்தில் புலவராக உலவி வந்தனர். மக்களிடையே தொழில் பிரிவாகத் தோன்றிய இக்கலைஞர்கள் நில பிரபுத்துவ தோற்ற காலத்தில் இனக்குழு மக்களின் தலைவர்களிடமும், புதிதாகத் தோன்றி வளர்ச்சி பெற்ற மன்னர்களிடமும் பிழைப்பை நாடிச் சென்றனர் என்பதை சங்கப் புறப் பாடல்களின் வழி காண முடிகிறது. இப்புலவர்கள் தாம் பாடிப் பெற்ற பரிசினைக் கொண்டு சில காலம் ஆடம்பர வாழ்க்கையை வெறுமனே இருந்து அனுபவித்து பொருள் தீர்ந்ததும் தன் வறுமை நீங்க வேறொரு வள்ளலை நாடியதாகத் தெரியவில்லை. தன் பரம்பரைத் தொழிலினை மேற்கொண்ட இவர்களுக்குத் தன் வாழ்க்கையில் வறுமை ஏற்படின் அதனைத் தீர்க்கவே வள்ளல்களின் உதவியை நாடினர். அவர்களுள் ஒரு சிலரே தங்கள் வாழ்விற்கு அடிப்படை ஆதாரமாகக் கவி பாடும் தொழிலினை மேற்கொண்டனர். எதுவாயிருந்தாலும் புலவர்கள் அரசர்களைப் பாடும் வேளையில் பெரும்பாலும் அரசர்களையும், அவர்களின் முன்னோர்களையும், முன்னோர்களின் பெருமையையும், குடும்பத்தாரையும் புகழ்ந்தும், வாழ்த்தியும் பாடினர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.*

*வாழ்த்து*

*சங்க காலம் என்ற உடனே நம் நினைவுக்கு வருவது வேந்தர்களின் ஆட்சித்திறனும், அவர்களின் கொடையும், அவற்றை உலகறிய உணர்த்திய புலவர்களின் புலமைத்திறனுமே ஆகும். புவியாண்ட மன்னர்களைக் கவியாண்ட புலவர்கள் பாராட்டிய விதமும், வாழ்த்திய திறனும் வேறு எந்த உலக இலக்கியங்களிலும் இல்லாத சிறந்த இலக்கிய நயத்தை நமக்குக் காட்டுகின்றன. வாழ்த்துவதற்கென்று ஒரு தனிப்பட்ட உள்ளம் வேண்டும். அவ்வாழ்த்தானது வெறும் வாய் வார்த்தையோடு நில்லாது வாழ்க்கையோடு பொருந்தி வரும்படியாக இருக்கச் செய்தனர் சங்கப் புலவர்கள். உலகாளும் மன்னன் உயர்நிலையில் தன் அரசை நிறுவி தன்னிகரில்லா தன்மை உடையவனாக வாழவே புலவர்கள் விரும்பினர். அவ்வாறு வாழ்ந்திட எந்த துறையிலும் அவர்கள் விதிவிலக்காய் இருக்க புலவர்கள் விரும்பியதில்லை. ஆட்சி, பகை முறித்தல், குடும்ப உறவு அனைத்திலும் மேம்பட்டவனாக விளங்க வாழ்த்தினர்.*

*குடும்பம்*

*நாடாளும் வேந்தர்கள் இல்லறம் இனிதே நடத்த வேண்டி புலவர்கள் வாழ்த்தினர். இல்லறம் நல்லறமாய் இருந்தால் தான் அரசன் புறத்திலும் திறம்படச் செயல்பட இயலும். அகமும், புறமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாயின் இரண்டும் செழிக்க புலவர் வாழ்த்தினர். நல் மனைவியோடு குழந்தை பேறு பெற்று இனிய புதல்வரோடு இன்புற்று வாழ வாழ்த்தினர் என்பதை,*

*"கடவுள் சான்ற கற்பின், சேயிழை*
*மடவோள் பயந்த மணி மருள் அவ் வாய்க்*
*கிண்கிணிப் புதல்வர் பொலிக!" (புறம். 198)*

*எனும் வரிகள் உணர்த்துகின்றன. மலையமான் திருமுடிக்காரி கபிலரால் புகழ்ந்து பாடப்பட்டவன். மேலும் அவன் முன்னோர் பாணருக்குச் செய்த சிறப்பைப் பாடும் மாறோக்கத்து நப்பசலையார், அம்மன்னனின் சுற்றமும், குழந்தைகள் மற்றும் மனைவியையும் சேர்த்து வாழ்த்துவதை,*

*"தெறல் அரு மரபின் நின் கிளையொடும் பொலிய," (புறம், 126)*

எனும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. நல்லாட்சி புரியும் வேந்தன்தனை நாட்டிற்கு அளித்த அவனுடைய பெற்றோரையும் அவனோடு சேர்த்து வாழ்த்தினர். நீதி தவறாமை, செங்கோல் ஆட்சி, போர் வெற்றி, இரவலரை ஆதரித்தல் என அனைத்திலும் புகழ் ஓங்கிய வேந்தன் அவனுடைய பெற்றோருக்கும் நற்பெயரை வாங்கித் தந்து வாழ்த்தைப் பெற்றுத் தந்தான் என்பதை,

"நீ வாழியர்! நின் தந்தை
தாய் வாழியர், நிற் பயந்திசினோரே!" (புறம். 137)

எனும் இவ்வரிகள் மூலம் உணரலாம். எதையும் எதிர்பார்த்து வாழ்த்துவது உன்னதமாகாது. அது பண்டமாற்று போன்றதொரு வியாபாரம் ஆகிவிடும். மேலும், நாட்டு நலனில் அக்கறை கொண்ட வேந்தன் எந்நேரமும் தன் நாடு, தன் மக்கள் என விழிப்புணர்வோடு செயல்படுவான். அக்காலங்களில் பல நாட்கள் தன் மனைவியைப் பிரிந்து பாசறையின் கண் தங்க நேரிடும். இதனால் அவர்தம் மனைவியர் நீங்கா துயரினை அடைவர். அத்தகைய துயர் நீங்கி நாடு அமைதியும், வளமும் பெற்றுத் திகழ நின் மனைவியோடு இனிதே கண்ணுறக்கம் கொள் என,

"நெஞ்சு அமர் காதல் நின்வெய் யோளொடு,
இன்துயி ........... சொல்" (புறம். 391)

என்று வாழ்த்திப் பாடுகிறார். இவ்வாறு மன்னனின் குடும்பமும் சிறப்புற வாழ வேண்டும் என்று புலவர்கள் வாழ்த்தினர்.

நீண்ட ஆயுள்

'நூறாண்டு காலம் வாழ்க' என வாழ்த்துவது உலக மரபு ஆகும். சங்கப் புலவர்களின் வாழ்த்துதல் இவற்றையெல்லாம் மிஞ்சி இயற்கையோடு இணைந்த ஒன்றாக அமைந்திருக்கின்றது. இன்னகாலம் வரை வாழ்வாயாக என வாழ்த்துவதை விட தோன்றிய காலமும் அழியக்கூடிய காலமும் யாராலும் அறிய இயலாத இயற்கையினை ஒத்த வாழ்நாள் பெற்று வாழ வாழ்த்துவது போற்றுதலுக்குரிய ஒன்றாகும்.

அரசனை வாழ்த்துகையில், அவன் நாட்டு எல்லைக்குட்பட்ட ஆற்றின் மணலினும் பலவாகிய நாட்கள் வாழ்க என வாழ்த்துவது மரபாகும். அதன்படியே நெடியோனால் உண்டாக்கப்பட்ட பஃறுளி ஆற்று மணலினும் பலகாலம் வாழ பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமி பெருவழுதியைக் கீழ்க்கண்டவாறு,

"முந்நீர் விழவின், நெடியோன்
நல் நீர்ப் பஃறுளி மணலினும் பலவே!" (புறம். 9)

என்று நெட்டிமையார் பாடுகிறார். மேலும் பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் வாழ்த்தும்போது

"ஒன்று பத்து அடுக்கிய கோடி கடை இரீஇய
பெருமைத்தாக, நின் ஆயுள்தானே!" (புறம். 18)

என்று வாழ்த்துகிறார். அதாவது தன் முயற்சியின் துணையால் முழங்கு கடலை வளைத்த நின் முன்னோரின் மரபில் வந்தவனே, ஒன்றைப் பத்தின் மடங்குகளாக அடுக்கிய கோடியைக் கடை எண்ணாக இருத்திய பேரெண்ணிக்கையைக் கொண்ட வாழ்நாளைப் பெற்று வாழ வாழ்த்துகிறார்.

சோழன் குளமுற்றதுத் துஞ்சிய கிள்ளிவளவனை ஆலத்தூர் கிழார் வாழ்த்துக்கையில், இமயமலையில் திரண்டு இனிய ஓசையைச் செய்து கீழே காற்றால் உந்தப்பட்டு வரும் பெரிய மேகம் பொழிந்த நுண்ணிய பல நீர் திவலைகளிலும் பல காலம் வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறார். இதனை,

"கொண்டல் மாமழை பொழிந்த
நுண் பல் துளியினும் வாழிய, பலவே!" (புறம். 34)

எனும் பாடல் வரிகள் மூலம் அறியலாம். மேலும், சோழ நாட்டு எல்லைக்குட்பட்ட ஆறாகிய காவிரி ஆற்று மணலினும் பல காலம் வாழ சோழன் மாவளத்தானைத் தாமப்பல் கண்ணனார் பின்வருமாறு வாழ்த்துகிறார்.

"சிறக்க நின் ஆயுள்-
மிக்கு வரும் இன் நீர்க் காவிரி
எக்கர் இட்ட மணலினும் பலவே!" (புறம் 43)

பாண்டியன் இளவந்திகை பள்ளித் துஞ்சிய நன்மாறனை

"நீ நீடு வாழிய – நெடுந்தகை!- தாழ்நீர்
வெண் தலைப் புணரி அலைக்கும் செந்தில்
நெடு வேள் நிலைஇய காமர் வியன்துறை,
கடு வளி தொகுப்ப ஈண்டிய
வடு ஆழ் எக்கர் மணலினும் பலவே!" (புறம். 55)

என்று முருகவேல் நிலைத்த செந்தூர் கடல் கொழித்த மணலினும் பலகாலம் நீடு வாழ்க என மருதனிளநாகனார் பாடுகிறார்.

மேலும் அரிய நெல்லிக்கனியைத் தான் உண்ணாது ,அதன் அரும்பயனையும் கூறாது தந்து உண்ண வைத்த அதியனை ஔவையார்,

"நீலமணி மிடற்று ஒருவன் போல மன்னுக பெரும" (புறம். 91)

என்று சிவபெருமான் போல நிலை பெற்று வாழவும், இவ்வுலகம் உள்ளளவும் சிவனுக்கு அழிவு இல்லாததாகையால் அவனுடைய வாழ்நாளை ஒத்து வாழவும் வாழ்த்துகிறார்.

"தண் புனல் வாயில் துறையூர் முன்துறை
நுண் பல மணலினும் ஏத்தி,
உண்குவம், பெரும! நீ நல்கிய வளனே" (புறம். 136)

என்று துறையூர் ஓடைக்கிழார் ஆயைத் துறையூரின் துறையிடத்து நுண்ணிய பல மணலினும் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார். மேலும், போரும் பூசலுமாய் வாழ்ந்த சங்க காலத்தில் மூவேந்தரும் ஒரே மேடையில் ஒருங்கிருப்பதைக் கண்ட ஔவையார்,

"... வானத்து
வயங்கித் தோன்றும் மீனினும், இம்மெனப்
பரந்துஇயங்கு மாமழை உறையினும்
உயர்ந்துமேந் தோன்றிப் பொலிக, நும் நாளே" (புறம். 367)

என்று விண்மீன்களைக் காட்டிலும், மழைத்துளிகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிக வாழ்நாளைப் பெற்று வாழ வாழ்த்துகிறார்.

ஈகையாளனாக வாழ்த்துதல்

வாழ்த்துகளுக்கெல்லாம் மிகவும் அடிப்படையாக விளங்குவது ஈகை ஒன்றே ஆகும். கொடையாளர்கள் பூமியில் நிலை பெற்று வாழவே இரவலர் விரும்பினர். செல்வந்தர் பலர் இருப்பினும், அவர்களுள் பிறருக்காக ஈயும் மனம் கொண்டோர் ஒரு சிலரே. தமிழகத்தை ஆண்ட மூவேந்தரைக் காட்டிலும் குன்றுகளையும், மலைகளையும் தம் ஆட்சிக்குரிய எல்லைகளாகக் கொண்டு ஆண்டு வந்த குறுநில மன்னர்களும், கடையெழு வள்ளல்களுமே இரவலர்களை அதிகம் ஆதரித்தனர். எனவே, பரிசிலரும் இவர்களையே நாடினர். அத்தகைய கொடையாளருக்குச் சிறு நோவு ஏற்பட்டாலும் புலவர்கள் தானும் உருகினர். அவர்தம் துன்பத்தில் பங்கேற்க முன் வந்தனர். பிட்டங்கொற்றனைக் காரிகண்ணனார் வாழ்த்துகையில் அவனது கொடைத்தன்மையைப் பாராட்டி,

"....எந்தை உள் அடி
முள்ளும் நோவ உறாற்கதில்ல!
ஈவோர் அரிய இவ் உலகத்து,
வாழ்வோர் வாழ, அவன் தாள் வாழியவே!" (புறம். 171)

என்று இவ்வுலகில் உயிர் வாழ்வோர் வாழ்நாள் எல்லாம் சேர்த்து அவன் வாழ்க என வாழ்த்துகிறார். மேலும் பசிப்பிணி மருத்துவனாகிய அரசனை,

"யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய" (புறம். 173)

என்று சிறுகுடிக்கிழான் பண்ணன் என்பவனின் பசிப்பிணி தீர்க்கும் திறத்தைப் பாராட்டி சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் வாழ்த்துகிறார்.

வாழ்த்துவதில் எல்லாம் உயர்ந்து நிற்கிறார் இவர். தன் வாழ்நாளை தனக்கு வேண்டாம் எனக் கூறி அதனையும் சேர்த்து அம்மன்னன் வாழ வாழ்த்துகிறார். மேலும் குறிப்பாக உணர்ந்து அவர்களுக்கு கொடுக்கும் குணம் உடையவன் கிள்ளிவளவன். அவன் ஆட்சியின் கீழ் வாழும் நாடும், மக்களும் இனிதே வாழ்ந்து சிறப்புறவும், பஞ்சம் வறட்சி இல்லாத வளம் கொழிக்கும் ஆட்சியாளனாக திகழவும் வாழ்த்துகிறார் கோவூர் கிழார்,

*"யாண்டும் நிற்க வெள்ளி; யாம்*
*வேண்டியது உணர்ந்தோன் தாள்வா ழியவே" (புறம் 386)*

*செல்வத்துப் பயனே ஈதல் எனும் கருத்தினை முன் வைத்தே சங்க மன்னர்கள் வாழ்ந்து வந்தனர். மலையாய்க் குவிந்த செல்வத்தை வற்றாத ஊற்றென அனைவருக்கும் வாரி வழங்கினர். பிற நாட்டிலிருந்து கொணர்ந்த வெற்றியின் பயனையும் தனக்கென கொள்ளாது வழங்கினர்.*

*இறப்பும் நோயும் நீங்கிட*

*மனிதன் பிறந்து இவ்வுலகில் வாழ்ந்து அவனுடைய வாழ்நாளின் இறுதியில் சாவை அடைவது மாற்ற இயலாத ஒன்றாகும். தோன்றும் பொருள்கள் அனைத்தும் அழியும் என்பது இயற்கையின் விதியாகும். இதற்குச் சற்று மாறாக சிந்தித்து புலவர் பெருமக்கள் ஆவல் கொண்டு பாடினர். அதாவது தன் நாட்டையும், நாட்டு மக்களையும் எவ்வித இன்னலும் இன்றி, இனிதே காத்து, திறம்பட ஆட்சி புரியும் மன்னனின் ஆட்சி, எவ்வித இடையூறும் இன்றி, இனிதே தொடரவும் அதற்கு அவனுடைய வாழ்வில் இறுதியான வாழ்நாள் நேராதிருக்கவும் விரும்பினர். அவ்வாறே வாழ்த்தினர். தன் அன்புக்குரிய மன்னன் கோட்டான்கள் அலறலும் தாழியில் புதைக்கப்படும் சுடுகாட்டைக் காணாதிருக்கவும், நோய் நீங்கிய யாக்கையைப் பெற்று வாழவும் வாழ்த்தினர். அரசர் தம் மகளிர் தன் நெடிய முற்றத்தில் நெய்தற் பறையும், சாப்பறையும் கேளாது ஒழிய வேண்டும் எனவும், அவர்களது மங்கல நாண் நிலைக்கவும் வேண்டினர். இவ்வாறு ஆதங்கனை, கள்ளில் ஆத்திரையனார்,*

*"ஐதுஅகல் அல்குல் மகளிர்*
*நெய்தல் கேளன்மார் நெடுங்கடை யானே" (புறம். 389)*

*என்று பாடுகிறார். தன்னை ஆதரித்த மன்னனின் இறப்பினால் பிற நாட்டு மன்னனை தேடிச்சென்று இரந்து நிற்கும் நிலையானது இரவலரின் வாழ்வில் மிகவும் கொடுமையான ஒன்றாகும். எனவே புலவர்கள் இந்நிலையை மனதில் கொண்டு வேந்தனுக்கு இறப்பே நேராகதிருக்கவும், நோய் காலங்களில் அவனைச் சந்திப்பதும் பொருள் பெறுவதும், அவனது ஆட்சியும் மக்களுக்கு அரிதாகிவிடும். ஆகையால், நோயின்றி வாழவும் வாழ்த்தினர். நோய் என்பது உடல் நோயை மட்டும் குறிப்பதன்று. முற்றிலும் பகை ஒழியவும், நல்லாட்சி மலரவும், மாதம் மும்மாரி பொழியவும், நாடு வளம் கொழிக்கவும், பஞ்சம் பசி நீங்கி மகிழ்ச்சியாய் வாழவும், குழப்பங்கள் அற்ற நோயற்ற வாழ்வு வாழவும் வாழ்த்தினர். பரிசில் தந்த மன்னனுக்கு மட்டுமின்றி வாழ்த்து. மாறாக,*

*"ஈயாய் ஆயினும் இரங்குவென், அல்லன்*
*நோய் இலை ஆகுமதி" (புறம். 209)*

*என்று பெருந்தலை சாத்தனார் பாடுவதில் இருந்து பரிசில் கிட்டாத போதும் அரசனைப் புலவோர் இவ்வாறு வாழ்த்தியதைச் சங்கப் புறப்பாடல்கள் எடுத்தியம்புகின்றன.*

*முடிவுரை*

*மனிதன் தன் சக மனிதனுக்கு மனதார ஒன்றை எவ்வித நோவும் இன்றி கொடுக்க இயல்வது வாழ்த்து ஒன்றே ஆகும். வாழ்த்துகள் என்பவை நேர்மறையான சிந்தனைகளையும், செயல்களையும் உருவாக்கும் வல்லமை படைத்தவை. எனவேதான் அரசர்கள் தன்னை ஆதரித்த வேளைகள் மட்டுமின்றி பரிசில் நீட்டித்த போதும் கூட அவர்களைச் சபிக்காது வாழ்த்தும் மனமுடையவர்களாக சங்கப் புலவர்களின் வாழ்த்தியல் திறம் அமைந்திருந்தது என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.*

*சான்றெண் விளக்கங்கள்*

*1.இர. பாலகிருட்ண முதலியார் (தொ.ஆ), தமிழ் ஆங்கில அகராதி, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம் லிமிடெட், டி.டி.கே. சாலை, சென்னை, இரண்டாம் பதிப்பு-1982, ப.166.*

*2. சந்தியா நடராஜன் (ப.ஆ), மதுரைத் தமிழ் அகராதி,(இரண்டாம் பாகம்), சந்தியா பதிப்பகம், அசோக் நகர், சென்னை, முதற்பதிப்பு-2004, ப.542*

********* ********* ********** ********* ********* ********** ********** **********